18.03.2024 அ.வ. எண்.182/2019 வா.சா. 1 செல்வராஜ்

குறுக்கு விசாரணை

தாவா சொத்து முதலில் என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டிருந்தது. என் தாத்தாவின் தகப்பனார் பெயர் கிஷ்டப்ப நாயுடு. கிஷ்டப்ப நாயுடுவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் இல்லை. கிஷ்டப்ப நாயுடுவிற்கு 3 மகன்கள், 3 மகள்கள். கிஷ்டப்ப நாயுடுவின் மகன்களில் குருசாமி நாயுடுவும், அக்கப்ப நாயுடுவும் தான் ஆண் வாரிசுகள், மற்றொருவர் இறந்துவிட்டார். கிஷ்டப்ப நாயுடு உயிருடன் இருந்தபோதே குருசாமி நாயுடு இறந்துவிட்டார் என்றால், கிஷ்டப்ப நாயுடு தான் முதலில் இறந்தார். அக்கப்ப நாயுடுவிற்கு ஆவண எண். 460/1958 ஆவணப்படி பாகத்தில் வந்தது என்று சொன்னால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் கூட்டுக்குடும்ப சொத்தை நிர்வாகம் செய்யமுடியாது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் அக்கப்ப நாயுடுவிற்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு வந்த சொத்துக்கள் என்று சொன்னால் தவறு. அக்கப்ப நாயுடுக்கு பூர்வீகமாய் வந்த சொத்துக்கள் என்றும், சில சொத்துக்களை அவருடைய மனைவி ஜெகதாம்பாள் பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் தவறு. அகத்தேரிப்பட்டு கிராம சொத்துக்கள் ஜெகதாம்பாள் பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். அக்கப்ப நாயுடுக்கு 2 பேர் வாரிசுகள். அவர்கள் பெயர் சரோஜினி அம்மாள், சகுந்தலா அம்மாள். அக்கப்ப நாயுடு இறப்பதற்கு முன்பாகவே ஜெகதாம்பாள் இறந்துவிட்டார். அகத்தேரிப்பட்டு கிராம சொத்துக்களும், விண்ணமங்கலம் கிராம சொத்துக்களின் ஒரு பகுதியும் அவரின் மகள்களுக்கு வாரிசு முறையில் சென்றதா என்றால் விண்ணமங்கலம் சொத்து கிடையாது. ஜெகதாம்பாள் பெயரில் இருந்த சொத்துக்களை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டார். அக்கப்ப நாயுடுவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அந்த சொத்துக்களை பொறுத்து ஆவணம் எழுதிவைக்க அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் தவறு. அக்கப்ப நாயுடு சொத்தில் அவருடைய மகள்களுக்கும் சமபாகம் உள்ளது என்று சொன்னால் தவறு. சரோஜினி அம்மாள்

அவருடைய மகள்களுக்கு சொத்து எழுதிவைத்தது போல் என்னுடைய சகோதரி விஜயலட்சுமிக்கும் எனக்கும் சொத்து எழுதிவைத்தார்கள். அக்கப்ப நாயுடு விட்டுச்சென்ற சொத்துக்களில் அக்கப்ப நாயுடு மகள்களுக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.16 சொத்து தனிப்பட்டமுறையில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 பட்டா சரோஜினியம்மாள், செல்வராஜ் மற்றும் சகுந்தலா ஆகியோர்கள் பெயரில் உள்ளது. விண்ணமங்கலம் கிராமத்தில் உள்ள சொத்து பட்டா எண்.170 அக்கப்ப நாயுடு பெயரில் தான் 2019 ஆம் ஆண்டுவரை இருந்தது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.